**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

முன்னிலை : **திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆடித் திங்கள் 14ம் நாள்

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் நாள் வியாழக்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 41/2021—ல் இடைமனு எண். 06/2025**

1. ராகினி
2. சிவபாலன் **...மனுதாரர்கள்/2,3பிரதிவாதிகள்**

...எதிர்...

1. சேகர் **...1ம் எதிர்மனுதாரர்/வாதி**
2. சார் பதிவாளர்,
   சார் பதிவாளர் அலுவலகம்,
   செம்பனார்கோவில்,
   தரங்கம்பாடி தாலுக்கா. **...2ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி**
3. கலியமூர்த்தி (இறந்தார்)
4. சிவசக்தி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 15.07.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. ஆம்ஸ்ட்ராங் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. P. விஜய் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

கடந்த 17.10.2023 அன்று மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:46:34 +0530

செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவாக வேண்டி மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–9, விதி–7–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்றும், அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்,

அசல் வழக்கின் முதல் பிரதிவாதி, இறந்துபோன மனுதாரரின் தகப்பனார் என்றும், 2ம் பிரதிவாதி மனுதாரரின் தாயார் என்றும், 4ம் பிரதிவாதி மனுதாரரின் சகோதரி என்றும், மனுதாரரின் தகப்பனார் கலியமூர்த்தி (உண்மையான பெயர் கலியபெருமாள்) உயிருடன் இருந்த காலத்தில், தாவா சொத்து சம்மந்தப்பட்ட அனைத்து விஷயங்களையும் வாதியுடன் அவரே கையாண்டதாகவும்,

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பின்னர் மனுதாரரின் தகப்பனார்தான் வழக்கறிஞர் நியமனம் உட்பட அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளையும் பார்த்துக் கொண்டதாகவும்,

இத்தகைய சூழ்நிலையில், அசல் வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்ட கடந்த மார்ச் 2021ல், நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைத்தபின்பு வழக்கறிஞர் திரு.S. விஜய் அவர்கள் நியமிக்கப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கானது நிலுவையில் இருந்தபோது, மனுதாரரின் தகப்பனார் கடந்த 30.08.2021 அன்று வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டதாகவும்,

**(1.2)** மனுதாரரின் தகப்பனார் இறந்தபிறகு, வழக்கானது எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 31.08.2021 முதல் 03.09.2022 வரை (13 வாய்தாக்கள்) பல்வேறு தேதிகளில் கெடு போடப்பட்டு, மேலும் கடந்த 01.11.2022 முதல் 11.04.2023 வரை (13 வாய்தாக்கள்) Steps க்காக கெடு போடப்பட்டும், மேலும் பல வாய்தாக்கல்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:46:39 +0530

போடப்பட்டும், இறுதியாக கடந்த 17.10.2023ல் 2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு, ஆஜரின்மையாலும், 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(1.3)** அசல் வழக்கானது எதிர்வழக்குரைக்காக வாய்தாக்கள் போடப்பட்டிருந்தபோது, முந்தைய வழக்கறிஞரால் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும், எதிர்வழக்குரை 3ம் பிரதிவாதி பெயரில் தயார் செய்து, அதனுடன் 11 ஆவணங்களையும் சேர்த்து தாக்கல் செய்ய வேண்டி கடந்த செப்டம்பர் 2023லேயே, மனுதாரர்கள் தங்களது வழக்கறிஞரிடம் கொடுத்திருந்ததாகவும், எனவே, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்று மனுதாரர்கள் நம்பிக்கொண்டிருந்ததாகவும், தற்போதுதான் உண்மை நிலை மனுதாரர்களுக்கு தெரியவந்ததாகவும்,

மேலும், மனுதாரரானவர் முந்தைய வழக்கறிஞரை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதெல்லாம், அவர் அழைப்பை புறக்கணித்துவிட்டதாகவும், எனவே, அசல் வழக்கின் நிலை பற்றி மனுதாரர்களுக்கு தெரியவில்லை என்றும், தற்போது, மேற்படி வழக்கானது 12.11.2025 அன்று வாதுரைக்காக கெடு போடப்பட்டு, 24.11.2025ல் தீர்ப்புரைக்காக கெடு போடப்பட்டதாகவும்,

எதிர்தரப்பினருடன் அதாவது வாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்ட மனுதாரர்களின் வழக்கறிஞர், அசல் வழக்கின் நிலை பற்றி மனுதாரர்களுக்கு தெரியப்படுத்தாமல் இருந்துவிட்டதாகவும், மேற்படி அசல் வழக்கின் நிலை குறித்து மனுதாரர்களுக்கு கடந்த 19.11.2025 அன்றுதான் மனுதாரர்களுக்கு தெரியவந்ததாகவும், எனவே, வழக்கறிஞர் திரு. S. விஜய் அவர்களின் செயல் குறித்து பார் கவுன்சில் ஆஃப் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் புகார் தெரிவிக்க போதிய நேரமில்லை என்றும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:46:45 +0530

**(1.4)** மனுதாரர் அலட்சியமாகவோ, வேண்டுமென்றோ எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், மனுதாரர்களின் கட்சியை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும்,

**(1.5)** எனவே, மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி அசல் வழக்கில் கடந்த 17.10.2023 அன்று, பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

**(2.1)** மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பல வாய்தாக்கள் வேண்டுமென்றே ஒத்தி வாங்கப்பட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் தான் பிரதிவாதிகளை Exparte செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும்,

**(2.2)** வாதி தரப்பில் வாதியையும், வேறு ஒரு சாட்சியான கருணாகரனையும் முதன்மை விசாரணை தாக்கல் செய்யப்பட்டு, அவர்களை 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் மற்றும், 5ம் பிரதிவாதி தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டு, வாதுரை செய்யப்பட்டு தீர்ப்பிற்காக கெடு போடப்பட்டுள்ள நிலையில் இந்த மனு தாக்கல் செய்திருப்பது ஏற்க கூடியதல்ல என்றும்,

**(2.3)** மேற்படி வழக்கில் மனுதாரர்கள் Exparte ஆகுவதற்கு முன்பே எதிர்வழக்குரை தயார் செய்து வைத்திருந்ததாக அபிடவிட்டில் கூறுவது தவறு என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் சரியாக விவரம் சொல்லாததால் தான் மனுதாரர்கள் Exparte ஆனார்கள் என அபிடவிட்டில் கூறுவது ஏற்க கூடியதல்ல என்றும்,

**(2.4)** வழக்கறிஞர் ஏதேனும் தவறு செய்தால் அவர் மீது Bar Council–யிடம் தான் முறையிட முடியுமே தவிர, இந்த மனு மூலம் பரிகாரம் தேட இயலாது



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:46:50 +0530

என்றும், இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி சிவசக்தி என்பவர் சீனியர் வழக்கறிஞர் என மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த அபிடவிட்டில் கூறியுள்ள போது 4ம் பிரதிவாதி வழக்கறிஞராக இருந்து கொண்டே வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் வழக்கை இழுத்தடிக்கும் எண்ணத்துடன் Exparte–யாகி பிரதிவாதிகள் நடந்து கொண்டது தெரிய வருவதாகவும்,

**(2.5)** மனுதாரர் மனுவுடன் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே இந்த மனுவை 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 2ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தரப்பில் இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று கடந்த 19.06.2026 அன்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

4. மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

**5**. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6. தீர்வு:</u>**

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

**(6.1)** அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(6.2)** அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:46:55 +0530

கடந்த 09.08.2021, 31.08.2021, 15.09.2021, 21.10.2021, 18.11.2021, 04.12.2021, 07.01.2022 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கு போதுமான அளவு கால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், கடந்த 17.10.2023 அன்று பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(6.3)** மேற்படி அசல் வழக்கில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(6.4)** மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கின் உண்மை நிலையானது வழக்கறிஞரால் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும், வழக்கறிஞர் எதிர்தரப்பினருடன் கூட்டு சேர்ந்து கொண்டு, வழக்கின் நிலை குறித்து மனுதாரர்களுக்கு தெரியப்படுத்தவில்லை என்றும், கடந்த செப்டம்பர் 2023 லேயே எதிர்வழக்குரை மற்றும் 11 ஆவணங்கள் சேர்த்து வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டதாகவும், வழக்கின் உண்மை நிலையானது கடந்த 19.11.2025 அன்றுதான் மனுதாரர்களுக்கு தெரியவந்ததாகவும், எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் ஏதேனும் தவறு செய்தால் அவர் மீது Bar Council–யிடம் தான் முறையிட முடியுமே தவிர, இந்த மனு மூலம் பரிகாரம் தேட இயலாது என்றும், இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி சிவசக்தி சீனியர் வழக்கறிஞராக இருந்து கொண்டே வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் வழக்கை இழுத்தடிக்கும் எண்ணத்துடன் Exparte–யாகி பிரதிவாதிகள் நடந்து கொண்டது தெரிய வருவதாகவும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:47:07 +0530

**(6.5)** மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனெனில் அனைவருமே திறன்பேசி (smart phone) உபயோகிக்கும் இன்றைய சூழலில், ஒரு வழக்கின் நிலை மற்றும் வாய்தா தேதி ஆகியவை குறித்து தெரிந்துகொள்ள திறன் பேசி மற்றும் ecourts செயலியே போதுமானதாக உள்ளது. இருப்பினும், இம்மனுவுடன் அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்பு கொடுத்து, இருதரப்பும் முழுவிசாரணை செய்து அதன் அடிப்படையில் முடிவு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். எனவே, மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியில்,** மனுதாரர்கள்/2,3பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 2ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதிக்கு செலவுத்தொகையாக தலா ரூ.1000/- ஆக கூடுதல் ரூ.2000/-(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) 07.08.2026-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க** 10.08.2026

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை மாதம்



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:47:18 +0530

30–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:47:24 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.30 18:47:29 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு உத்தரவு**
அசல் வழக்கு எண்.41/2021ல்
இடைமனு எண்.06/2025
நாள் 30.07.2026.